# கண்ணனூர் ஊராட்சி மன்ற தலைவர்/ செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
# முன்னிலை திருமதி. R. மகேஸ்வரி

ந.க.எண்:1/2023-2024

நாள் : 12.03.2024

பொருள் : மனைப்பிரிவு - துறையூர் ஊராட்சி ஒன்றியம் - கண்ணனூர் ஊராட்சி - வடக்குவெளி கிராம சர்வே எண் : 412/1B, 412/1C, 417/5B மற்றும் 417/6-ல் கட்டுப்பட்ட 4.70 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்புக்கான ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை :
1. திருமதி. B. சுசித்ரா திருச்சி என்பவரின் விண்ணப்பம் நாள் : 06.03.2024
2. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் எண் : ROC No BUPKAIT/22577/ 2024/ TCP/2024 நாள் : 26.02.2024
3. தானபத்திரம் எண் : 1456/2024 நாள் : 22.02.2024
4. கண்ணனூர் ஊராட்சி மன்ற தீர்மான எண் : 98 நாள்: 12.03.2024

*******************

**உத்தரவு :**

துறையூர் ஊராட்சி ஒன்றிம், கண்ணனூர் ஊராட்சி வடக்குவெளி கிராம சர்வே எண் : 412/1B, 412/1C, 417/5B மற்றும் 417/6-ல் கட்டுப்பட்ட 4.70 ஏக்கர் நிலப்பரப்பில் மனைப்பிரிவு அனுமதி வழங்ககோரி திருமதி. B. சுசித்ரா திருச்சி என்பவர் பார்வை 1-ல் காணும் விபரப்படி புதிய மனைப்பிரிவு அமைப்பதற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்க கோரி நகர் ஊரமைப்பு துறை திருச்சிராப்பள்ளிக்கு மனுதாரரால் விண்ணப்பம் அனுப்பப்பட்டது. புதிய மனைப்பிரிவு அமைக்கப்பட உள்ள இடத்தில் சாலை, பொது ஒதுக்கீடு மற்றும் அடிப்படை வசதிகள் மனுதாரரால் செய்யப்பட்டுள்ளதை புகைப்படத்துடன் நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை 2-ல் காணும் நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதத்தின்படி ம.வ.ந.ஊ.இ.இ (தி.மா) எண் : 32/2024 நாள் : 26.02.2024 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பார்வை 3-ல் காணும் தானபத்திரத்தில் மனைப்பிரிவு நிபந்தனையில் தெரிவித்துள்ளவாறு மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பூங்காவிற்க்கான இடம் தானபத்திர எண் : 1456/2024 நாள் : 22.02.2024-ன்படி கண்ணனூர் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. ஒப்படைக்கப்பட்ட சாலைகள் மற்றும் பூங்காவிற்க்கான இடம் வருவாய்த்துறை கணக்கில் தலைவர் கண்ணனூர் ஊராட்சி என்பவர் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு

பார்வை 4-ல் காணும்படி ஊராட்சி மன்ற தீர்மான இயற்றப்பட்டுள்ளது. மனைப்பிரிவில் தேவையான தார் சாலைகள், பாலங்கள், கழிவுநீர் வாய்க்கால் ஆகியவை மனுதாரரால் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. பார்வை 4-ல் காணும் விபரப்படி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களால் மனைப்பிரிவு அமைந்துள்ள பகுதி நேரடி ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

மேலும், உத்தேச மனை இடத்திற்கு சந்தை மதிப்பில் 3 விழுக்காடு தொகை 3.46x500000=1730000x3%xRs.51900/- (ரூபாய் ஐம்பத்து ஓராயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) இரசீது எண் : 2023-2024/16/13/3/7/10 நாள் : 16.03.2024-ன்படி ஊராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, நகர் ஊரமைப்பு இணை இயக்குநரின் ம.வ.ந.ஊ.இ.இ (தி.மா) எண் : 32/2024 நாள் : 26.02.2024-ன்படி உள்ள நிபந்தனைக்குட்பட்டு வரிசை எண் 1 முதல் 84 வரையிலான மனைகள் மற்றும் மனுதாரர் உபயோகம் ஆகியவை வரன்முறை செய்து பத்திரம் பதிவு செய்து கொள்வதற்கு ஒப்புதல்அளித்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

**இணைப்பு :**

1. மனைப்பிரிவு வரைபடம்
2. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் திருச்சிராப்பள்ளி அவர்களின் நிபந்தனை மற்றும் அனுமதி கடிதம்.

**ஊராட்சி மன்ற தலைவர்/செயல் அலுவலர்**
**கண்ணனூர் ஊராட்சி**

**பெறுநர் :**

திருமதி. B. சுசித்ரா
க.எண் : 1 கணபதி அய்யர் லேன்,
வடக்கு ஆண்டாள் வீதி,
தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி - 620 002.

**நகல் :**

1. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் திருச்சிராப்பள்ளி அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஊராட்சி ஒன்றியம், துறையூர் அவர்களின் பணிந்தனுப்பப்படுகிறது.